# இலங்கை அதிபர் சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2025(2026)

## பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளை (Co -Curricular Activities -CCA) நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான வழிகாட்டல் குறிப்புகள்

**விரிவுரை : மாஹீர் அசனார் (Mahir Asanar)**

**Feedback at Phone : 077-5922020 / 070-6672023**

**01. அறிமுகம் : (Introduction)**

பாடசாலையில் செயற்படுத்தப்படுகின்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளாக அடையாளப்படுத்தப்படுவது பாடத்திட்டத்திற்கு சமாந்தரமான முறையில் மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு உதவுகின்ற விதத்தில் பங்களிப்புச் செய்யும் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளாகும். இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாவது நல்ல ஒழுக்கச் செயல்களைக் கொண்ட சமூக ரீதியான ஒருங்கிணைந்த மாணவர் தலைமுறையை உருவாக்குவதாகும். இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் பிறர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் பொறுப்புடன் செயற்படல், பொறுமை காத்தல், நட்பாக இருத்தல் மற்றும் குழு நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்புப் பெறுதல் போன்ற குணங்களை வளர்க்க இடமளிக்கப்படுகின்றது. சட்டவிரோதமான செயற்பாடுகளிலிருந்து பிள்ளைகள் ஏமாறுவதை தவிர்க்க இது காரணமாக அமைகின்றது. மாணவர்களுக்கு சிறந்த சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், அதே போன்று சிறந்த மன நிலையுடன் தங்களின் கல்வி நடவடிக்கைகளின் வெற்றிகொள்வதற்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பங்களிப்புச்செய்கின்றது.

ஆகையினால் ஒவ்வொரு அதிபரும் பாடசாலைகளில் ஒழுங்கமைக்கப்பட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடாத்திச்செல்வது அவசியமானதாகும். பாடசாலையிலும் ஒழுங்கமைக்கப்பட்ட இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை நடாத்திச் செல்வது சுலபமானதாகும். ஓவ்வொரு பாடசாலையும் அதனது மனிதவளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் போன்றவற்றை கவனத்தில் கொண்டு பாடசாலையின் கலாசாரத்திற்கு பொருத்தமான வகையிலும் உச்ச அளவிலான இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஒழங்கமைப்பு செய்து கொள்வது பாடசாலைக்கு உகந்தது.

பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகளை செயற்திறன்மிக்கதாக செயற்படுத்துவதற்கான பொருத்தமான முறைமைகளினை பாடசாலை நிருவாகத்தின் தலையீட்டுடன் ஏற்பாடு செய்து வழங்குவது அவசியமாவதுடன் அதன் மூலம் பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஒழுங்கமைத்து நிர்வகிப்பதும் என கருத்திற் கொள்ளப்படுகின்றது. ஆகையினால், **கல்வி அமைச்சின் 31/2024 ஆம்**

Mahir Asanar

**இலக்க சுற்றுநிருபத்தில் (2024.09.18)** காட்டப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஒழுங்கமைத்து கொள்வதனையும் முகாமைப்படுத்திக் கொள்வதனையும் உறதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

**02. நோக்கங்கள்**

- சமநிலையான ஆளுமை கொண்ட மாணவர்களை உருவாக்குதல்
- மாணவர்களிடத்திலுள்ள மென் திறன்களை மேம்படுத்துதல்
- நாட்டின் நிலையான இருப்பு, நாட்டின் எதிர்காலம் முறையான பெருமையினை சார்ந்து இருக்கின்ற மாணவர் பரம்பரையொன்றினை ஆரோக்கியமான உடல் நலத்துடனும் முறையான திறமைகளுடனும் கூடியதாக கட்டியெழுப்புதல்.
- தொழில் சந்தைக்கு தகுதியான நிபுணத்துவம் கொண்ட பரம்பரையினை தோற்றுவித்தல்.
- இலங்கையர் என்ற அடையாளத்துடன் கூடிய உலகளாவிய குடிமகனை உருவாக்குவதற்கு தேவையான சூழலை உருவாக்குதல்.

**03. இணைப்பாடவிதான வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தலும் செயற்படுத்துதலும்.**

- பாடசாலையினுள் செய்யப்படுகின்ற இணைப்பாடவிதான செயற்பாடு தொடர்பாக அதிபர் நேர்மறையான மனோநிலையில் பூரணத்துவமுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்காக வேண்டி பங்குபற்றுனர்கள், ஏற்பாட்டாளர்கள், ஆசிரியர்களை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தினை புரிந்து கொள்ளுதல் வேண்டும் ( இது தொடர்பாக பூரண பொறுப்புக்கூறலையும் அதிபருக்கு வழங்கப்படுவதுடன் அசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரினதும் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.)

- அனைத்து மாணவர்களினதும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் மாணவர் குறிப்புப் புத்தகத்தில் அவசியம் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பாடசாலையினுள் நடாத்திச் செய்யப்பட வேண்டிய இணைப்பாடவிதான செயற்பாட்டின் அளவினை தீர்மானிப்பதும் அவற்றினை நடாத்திச்

Mahir Asanar

செல்வதற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்பாடு செய்து வழங்குவதும் அதிபரிடமுள்ள பொறுப்பாகும்.

- மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறின்றி இணைப்பாடவிதான செயற்பாட்டு நடவடிக்கைகளை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுத்தல்.

- இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக **பிரதி / உதவி அதிபர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.**

- இயலுமை ஆற்றல் மற்றும் ஆர்வத்தினை கருத்தில் கொண்டு பாடசாலையில் செயற்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவருக்கு பொறுப்புக்கள் **எழுத்து மூலமாக வழங்கப்படுதல் வேண்டும்**

- பாடசாலை நேரத்திற்குப்பின்னர் வெளிவாரியான பயிற்சிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சிகளின் போது அனைத்து வேளைகளிலும் இணைப்பாட செயற்பாடுகளுக்கான பொறுப்பாசிரியர் மாணவர்களுடன் கலந்து கொள்வது அவசியமானதாகும்
- அனைத்து இணைணப்பாடவிதான செயற்பாடுகளும் அதிபரினது அல்லது பிரதி அதிபரினது முழுமையான தலைமைத்துவத்துடன் கூடியதாக ஒழுங்குபடுத்தலுக்கும் மேற்பார்வை செய்யப்படுவதற்கும் உட்படுத்தப்படுதல் வேண்டும்.

- கல்வி அமைச்சின் 31/2024 சுற்றுநிருபத்துடன் அடையாளப்படுத்தி வழங்கப்பட்டுள்ள ஆலோசனை குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள முறைமைகளின் ஊடாக உரிய விதத்தில் குழுக்களும் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்

- கல்வி அமைச்சின் செயலாளரினது ED/1/15/2/4/26 இலக்கம் கொண்ட 2014.03.19 திகதிய கடிதத்தின் படி "எல்லா பாடசாலை தவணை பரீட்சையின் போதும் விளையாட்டுக்கான முன்னேற்ற அறிக்கை புத்தகத்திற்கு புள்ளி வழங்குதல்" எனும் தலைப்பிலான ஆலோசனைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டதிற்கு அமைவாக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்ற பாடசாலைகள் விளையாட்டு மேம்பாட்டு வேலைத் திட்டத்திற்கமைய மாற்றுத்திறன் உள்ள பிள்ளைகள் தவிர ஏனைய

Mahir Asanar

பாடசாலை மாணவர்களுக்காக பாடசாலைகளுக்குள் நடைபெறுகின்ற விளையாட்டில் ஈடுபடுவது அவசியமானதாகும் என்பதுடன் இதற்கு மேலதிகமாக மேலும் **இரண்டு** இணைப்பாடவிதான செயற்பாடுகளிலாவது ஈடுபடுதல் வேண்டும்.

- ஒரு வருடத்தினுள் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்ற அனைத்து இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் பாடசாலை ஆண்டுக் கலண்டரில் உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் அதற்கேற்ப நிதி ஒதுக்கீடுகளையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக பயிற்சியாளர்களாக வெளியாட்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்ற போது அது தொடர்பாக நடைமுறையில் உள்ள சுற்று நிருபத்திற்கு அமைய **நேர்முகப் பரீட்சையின் ஊடாக** மிக பொருத்தமான நபருக்கு வாய்ப்பளித்தல் வேண்டும்

- பாடசாலை நேரத்திலும் அல்லது பாடசாலை நேரத்துக்கு பின்னரும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அல்லது வேறு ஏதேனும் பாடசாலை நிகழ்ச்சி ஒன்றிற்காக பாடசாலையில் இருந்து வெளியில் செல்லும்போது உரிய செயற்பாடு தொடர்பாக பொறுப்பாக இருக்கின்ற ஆசிரியர் அல்லது ஆசிரியை பயிற்சியாளராக மேலதிகமாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும்

- பெண்கள் கலந்து கொள்கின்ற இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக **ஆசிரியை ஒருவர்** கலந்து கொள்வது அவசியமானதாகும்.

- வெளி நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு விஜயத்திற்காக தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களை பங்குபற்ற செய்யும்போது உரிய பாடசாலைகள் அல்லது பாடசாலைகளின் ஆசிரியர் ஒருவர் அல்லது ஆசிரியர்களது பங்குபற்றுதல் அவசியமானதாகும்

- தேசிய மற்றும் சர்வதேச பயிற்சிகளுக்கு வேலைத்திட்டங்களுக்கு அல்லது புலமைப் பரிசில்களுக்கு பங்கு கொள்ளச் செய்வதற்காக மாணவர்களை அல்லது ஆசிரியர்களை தெரிவு செய்யும் போது முறையான **நேர்முகப் பரீட்சை செயற்பாட்டின் ஊடாக** மிகப் பொருத்தமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.

Mahir Asanar

- பாடத்திட்டத்திற்கு அப்பால் சென்று இணைபாடவிதான செயற்பாடுகள் மூலம் மாணவர்களுக்கு புதிய ஒரு பரிமாணத்தை ஏற்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமையவும் **இல. (31/2024)** அந்த சுற்றிநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குறிப்புகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது அனைத்து ஆசிரியர்களும் பொறுப்பாகும்.

கல்வியும் பாடசாலை பாடத்திட்டமும் மிகக் கூடிய கவனத்திற்கு உள்ளாக்கப்பட்டு கல்விச் சீர்திருத்தம் புதிய அரசின் முன்னுரிமைக்கும் ஒத்துழைப்புக்கும் உட்படுத்தி விரிவான கல்விச் சீர்திருத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்கமைய முறையான பாடத்திட்டமும் அதேபோன்று இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் மிக அர்த்தமுள்ளதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் கற்றல் ஆற்றல்களை மேம்படுத்துகின்ற வேலைத்திட்டம் ஒன்றாக மாற்றியமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது

இதற்கமைய பாடசாலை பிள்ளைகளிடத்தில் உள, உடல் , சிந்தனை, சமூக, கலாசார மற்றும் நடத்தை போன்ற பிரிவுகளில் மேம்பாட்டை உருவாக்கும் விதத்தில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதல் வேண்டும் மேலும் இளைஞர்களிடத்தில் உருவாகின்ற அடிப்படையிலான தீவிரத் தன்மைகளை தவிர்ப்பதற்கான ஒரு உபாய முறைகளாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் முக்கியம் பெறுகின்றது. மாணவர்களின் ஆற்றல்கள் திறமைகளுக்கு எற்ப இந்த இணைப்பாடவிதான செயற்பாடுகள் மேம்படுத்தப்படுவதும் அவசியமானதொன்றாகும்

மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக பங்குபற்ற செய்வதும் அவர்களது செயற்பாட்டு மட்டத்திலான முறைமையின் அடிப்படையில் இருந்து கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

இணைப்பாடவிதான வேலைதிட்டங்களின் நோக்கங்களை ஈட்டி செல்வதற்காக ஆசிரியர்களினது ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு மாணவனும் முடியுமான அளவுக்கு இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கு பற்றுவதற்காக ஆர்வமூட்டப்படுதல் வேண்டும்.

பாடசாலையில் செயற்படுத்தப்படுகின்ற இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலை அதிபர் நேர்மறையான சிந்தனை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கு கொள்வோர் அதனை ஏற்பாடு செய்வோர் அதனை ஊக்குவிப்பின் முக்கியத்துவத்தினை புரிந்து கொள்ளுதல் வேண்டும். அத்துடன் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். மாணவர்களிடத்தில் மறைந்துள்ள ஆற்றல்களையும் திறன்களையும்

Mahir Asanar

இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் மேம்படுத்துவதனையும் திட்டமிடப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**பாடசாலை மட்டத்தில் இணைப்பாடவிதான செயற்பாடுகளை செயல்படுத்துவதன் ஊடாக கீழ்குறிப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது**

- சமநிலையான ஆற்றல்களைக் கொண்ட மாணவ, மாணவிகளை தோற்றுவித்தல்
- மாணவ, மாணவிகளிடத்தில் இருக்க வேண்டிய மொத்த ஆற்றல்களை மேம்படுத்துதல்.
- நாட்டின் நிலையான இருப்பு, சிறந்த ஆளுமை கொண்ட மாணவர் பரம்பரை சிறந்த உடல் , உள ஆரோக்கியத்துடன் கூடிய மாணவ சமூகத்தை தோற்றுவித்தல்.
- தொழில் சந்தைக்கு பொருத்தமான நிபுணத்துவத்துடன் கூடிய பிரஜைகளை தோற்றுவித்தல்.
- இலங்கையின் அடையாளத்துடன் இருக்கின்ற உலகளாவிய பிள்ளைகளை தோற்றுவிப்பதற்கு தேவையான சூழலை நிர்மானம் செய்தல்.

**01. அறிமுகம்**

- இணைப்பாடவிதான செயல்பாடுகளை வரையறை செய்தல்
- முழுமையான வளர்ச்சியால் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவம்
- இணைப்பாடவிதான செயற்பாடுகளின் நோக்கங்கள்

**02. இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வகைகள்**

- விளையாட்டும், உடல் ரீதியான செயல்பாடுகளும்
- கலையும், கலாசாரமும்
- சங்கமும் , சமூகமும்
- தலைமைத்துவமும் , சேவையும்
- கலை அறிவினை செழுமைப்படுத்தும் வேலை திட்டங்கள்

**03. இணைப்பாடவிதான செயற்பாடுகளின் கட்டமைப்பு**

- வருடாந்த நாட்காட்டி (கல்வி ஆண்டு முழுவதும் உள்ள வேலை திட்டங்களின் சுருக்கமாக திட்டமிடல்)
- அனைத்து பிள்ளைகளையும் செயற்பாடுகளில் உள்ளீர்ப்புச் செய்தல் (செயற்பாடுகளின் வீச்சுக்கு அமைய பிள்ளைகளையும் அனுப்புதல் வழிநடத்துதல்)

Mahir Asanar

- முறையான கலை பாடத்திட்டத்துடன் இணைப்புச் செய்தல்
- இயைந்து போதல் (மாணவர்களின் விருப்பு மற்றும் தேவை என்பவற்றின் அடிப்படையில் செயற்பாடுகளை தெரிவு செய்தல்)
- நேர முகாமைத்துவம் (கலைப்பாடத்திட்டங்களுடன் இணைபாடவிதானங்களுடன் கல்வியை சமநிலைப்படுத்தல்)

**04. ஆசிரியர்களினதும் பயிற்சியாளர்களினதும் கடமைப் பொறுப்புக்கள்**

- மாணவ மாணவிகளுக்கு வாய்ப்பு வழங்கி சரியான முறையில் அவர்களினது திறமைகளை அடையாளம் காணுதல்
- வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்குதலும்
- நிபுணத்துவத்தை வளர்ப்பதற்காக வசதி வாய்ப்புகளை வழங்குதல்
- மேற்பார்வையும் மதிப்பீடு

**05. மாணவர் பங்குபற்றுதலும் பொறுப்புகூறுதலும்**

- சுயேட்சையான பங்குபற்றுதல்
- அர்ப்பணிப்பும் சமூகமளித்தலும்
- சம வயதுடைய நண்பர்களையும் ஆலோசனை வழங்குபவர்களையும் கண்ணியப்படுத்துதல்
- பாடசாலை சமூகத்துக்கு பங்களிப்பு செய்தல்
- தனிப்பட்ட அனுமதி

**06. வளங்களும் வசதி வாய்ப்புக்களும்**

- இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக வரவு செலவுகளை வேறுபடுத்துதல்
- வசதிவாய்ப்புகள் மற்றும் உபகரணங்களுக்காக உரிய முறையில் அளவிடுதல்
- வெளிவாரியான அதிதியுடன் ஒத்துழைத்தல்
- பொருத்தமான பாதுகாப்புப் படிமுறைகளைப் பின்பற்றுதல்

**07. ஏற்றுக்கொள்ளுதலும் பரிசளித்தலும்**

- வெற்றியை ஏற்றுக்கொள்ளுதல்
- சித்தியடைதலும் சான்றிதழும்
- கலைசார் கல்வி நடவடிக்கைகளுடன் ஒன்றிணைதல்
- மாணவ மதிப்பீட்டில் நேர்மறையிலான கலாச்சாரத்தை உருவாக்குதல்

Mahir Asanar

**08. பெற்றோர்கள் மற்றும் சமூகத்துடன் ஒத்துழைத்தல்**

- பெற்றோர்களினது ஒத்துழைப்பும் பங்குபற்றுதலும்
- சமூகம் தொடர்புபடுகின்ற சந்தர்ப்பங்கள்
- மாணவர்களின் வெற்றியினை பாடசாலையினுள் காட்சிப்படுத்துதல்

**09. அளவிடுதலும் மதிப்பிடுதலும்**

- பாடக்குறிப்பு செயற்பாட்டினை அளவீடு செய்யும் வரையறை அல்லது அளவுகோல்
- தரப்படுத்தல் மற்றும் அறிக்கை இடுகின்ற பொறிமுறைகள்
- கருத்து மற்றும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்

**10. தொடர்ச்சியாக மேம்பாடு செய்தல்**

- இணைப்பாடவிதான வேலைத்திட்ட மீளாய்வு
- மீளாய்வு மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள்
- வேறுபடுகின்ற போக்குகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைத்தல்

**11. முடிவு**

- முழுமையான கல்விக்காக பாடசாலையின் அர்ப்பணிப்பினை பலப்படுத்துதல் (முழுமையான மாணவர் பூரணமான பிரஜையாக்குதல்)
- வாழ்நாள்பூராகவும் கற்றல் மற்றும் நிபுணத்துவத்தினை மேம்படுத்துதலை ஊக்குவித்தல்

**பாடசாலையினுள் செயல்படுத்த முடியுமான பொதுவான செயற்பாடுகள்**
**(அ) விசேட விழாக்களும் வேலைத்திட்டங்களும்**

- விளையாட்டு விழா
- கலை விழா
- மார்கச்சார்வேலைத்திட்டம்
- வர்ண இரவுகள்
- மாணவர் தலைவர் வேலைத்திட்டம்
- பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள்
- ஊட்டச்சத்து திட்டங்கள்
- சுகாதார நிகழ்ச்சிகள்
- சுற்றுச்சூழல் திட்டங்கள்
- முதலுதவி திட்டங்கள்

Mahir Asanar

- கூட்டங்கள்
- மாணவ நலத்திட்டங்கள்
- வெளி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வேலை திட்டங்கள் (உதாரணம் - ஊடக பிரதி போன்றன)
- நூலகம்
- சிரமதானம்
- தேசியம் மற்றும் சர்வதேச அளவிலான கொண்டாடப்படும் நிகழ்ச்சி திட்டங்கள் (ஆண்டு விழா, சுதந்திரதின விழா, ஆசிரியர் தினம், தீபாவளி)

**(ஆ)இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- இசைக்குழுக்கள்
- கவிதைச் சங்கங்கள்
- சிறுகதை எழுதுதல்
- சுவர் செய்தித்தாள்கள்
- பல்வேறு திட்டங்கள்
- எழுத்தாளர் சங்கம்
- கண்காட்சிகள் /அறிவு /அளவீட்டு போட்டிகள்
- பொது பேச்சுக்கள்
- ஊடக வட்டங்கள்
- கைவினைப் பொருட்கள் மற்றும் செயற்பாடுகள்
- ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள்
- நாடக வட்டங்கள்
- சமையல் நிகழ்ச்சிகள்
- புகைப்படச் சங்கம்
- பயிற்சி முகாம்கள்
- சுற்றுச்சூழல் குழுக்கள்
- இலக்கியவட்டம்
- நடனம் அல்லது கிராமத்து நாடகம்
- நகைச்சுவை மற்றும் படப்பட்டறை
- வாசிப்பு போட்டிகள்
- பொழுதுபோக்கு வட்டங்கள்
- தையல் பின்னல்
- பொது அறிவு வட்டங்கள்

Mahir Asanar

- இசைக்குழுக்கள்
- யோகா பயிற்சிகள்
- சுவரொட்டி வடிவமைப்புகள்
- வகுப்பு ஒன்று கூடல்கள்

  இதற்கு மேலதிகமாக பாடசாலையினுள் செயல்படுகின்ற சங்கங்களுக்கு ஏற்ற மேலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை சேர்த்துக்கொள்ள முடியும்

**(இ) சங்கங்கள்**

- சிங்கள இலக்கியச் சங்கம்
- கூட்டுறவு சங்கங்கள்
- தொல்லியல் சங்கம்
- இளம் படைப்பாளர்கள் சங்கம் / கண்டுபிடிப்பாளர்கள் ஒன்றியம்
- அறிவியல்
- கணிதம்
- வீட்டு நிர்மாணம்
- வானவியல்
- பொருளாதாரச் சங்கம்
- ஆங்கில இலக்கியச் சங்கம்
- மின்னணு தொழில்நுட்ப சங்கம்
- வரலாற்றுச் சங்கங்கள்
- உளவியல் சங்கங்கள்
- ரோபோடிக் சங்கங்கள்
- கவிதை சங்கங்கள்
- வலையமைப்பு சங்கங்கள்
- எழுத்தாளர் சங்கங்கள்
- விமான சேவை சங்கங்கள்
- தொழில்முனைவோர் வட்டங்கள்
- வீட்டப் பொருளாதாரச் சங்கங்கள்
- Interact club
- UNESCO
- வாசிப்புச் சங்கங்கள்
- வளம்மிக்க சமூகங்கள்
- தொழில்வழிகாட்டல் சங்கங்கள்

Mahir Asanar

**பாடசாலையினுள் செயற்படுத்தப்படுகின்ற வெளிவாரியான நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்ற பிரதான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- சாரணர்
- பெண் சாரணர்
- மாணவர் படையணி
- செஞ்ஜோன் அம்புலன்ஸ் சேவை
- செஞ்சிலுவை சங்கம்
- ஆரோக்கிய தானம்
- தேசிய இளைஞர் விருது நிகழ்ச்சி
- சுற்றுச்சூழல் மாதிரிகள்
- வீட்டு பாதுகாப்பு ஜனாதிபதி விருது

**ஆரம்ப பாடசாலைகளில் அல்லது ஆரம்ப பிரிவுகளில் செயற்படுத்த முடியுமான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

**பொதுப்பாட / இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- விளையாட்டு விழாக்கள்
- மார்க்கம்சார் நிகழ்ச்சித் திட்டங்கள்
- மாணவர் தலைவர் நிகழ்ச்சி திட்டம்
- பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள்
- ஆரோக்கிய நிகழ்ச்சி திட்டங்கள்
- சுற்றுச்சூழல் திட்டங்கள்
- முதலுதவி நிகழ்ச்சிகள்
- கூட்டங்கள்
- மாணவர் நலத்திட்டங்கள்
- வெளி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகள்
- நூல் நிலையம்
- சிரமதானம்
- தேசிய சர்வதேச மட்டத்தில் கொண்டாடப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் (புத்தாண்டு விழா, சுதந்திர தினம் , ஆசிரியர்தினம்)

Mahir Asanar

**சங்கங்கள்**

- சிங்கள இலக்கியம்
- ஆங்கில இலக்கியம்
- நடனம் அல்லது நர்த்தனம்
- இசை மற்றும் நடன குழுக்கள்
- வளமான சமூகங்கள்
- எதிர்கால சாதனையாளர்கள் சங்கம்
- சிற்பம் மற்றும் கலை மன்றங்கள்
- பொழுதுபோக்கும் மற்றும் விளையாட்டு விழா
- கற்றல் சங்கங்கள்
- சாரணர் அல்லது பெண் சாரணர்
- பொழுதுபோக்கு கழகங்கள்

**கல்வி நடவடிக்கைகள் மற்றும் இணைந்த பாடங்கள் தொடர்பான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- வாசிப்பு சங்கங்கள்
- சுவர் செய்தித்தாள்கள்
- கதை சொல்லுதல்
- கவிதைகளை படித்தல்
- சுவரொட்டி வடிவமைத்தல்
- விவாதம் புரிதல்
- கண்காட்சிகள்
- ஆங்கிலம்

**பொழுது போக்கிற்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- முத்திரைச் சங்கங்கள்
- இலக்கியம் அல்லது நடனம்
- களப் பயணங்கள்
- சிற்பம் மற்றும் ஓவியங்கள்
- வேடிக்கை விளையாட்டுகள்
- நூலக நிகழ்ச்சி அல்லது வகுப்பு நூலகம்

Mahir Asanar

**சமூக அபிவிருத்திக்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- சாரணர் / பெண் சாரணர் / ஆரோக்கிய தானம் / மாணவர் படையணி
- கவிதை நிகழ்ச்சிகள்
- தலைமைத்துவ மேம்பாட்டு வேலைத் திட்டங்கள்
- பல்வேறு சமயங்களுக்கு மத்தியிலும் இனங்களுக்கு மத்தியிலும் சுமூகமான உறவை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள்
- களப்பயணங்கள்
- தேசிய சர்வதேச நிறுவனங்களை கொண்டாடும் வேலைத் திட்டங்கள்

**உடற்திறன்களை மேம்படுத்துவதற்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- விளையாட்டு (உட்புற / வெளிப்புற)
- Drill / Parade காட்சி (உடல் அப்பியாசக் கண்காட்சி)
- உடற்பயிற்சி
- வேடிக்கை விளையாட்டுகள்

**கலாச்சார திறன்களை மேம்படுத்துவதற்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- இலங்கை பாரம்பரிய இசை
- நடனம்
- நாடகம்

**பல்வேறு கலாசார விழாக்கள்**

- புதுவருடம்
- தைப்பொங்கல்
- தீபாவளி
- றமளான பண்டிகை
- நத்தார் உட்பட வேறு கலாசார விழாக்கள்

**குடியுரிமை மற்றும் மதிப்புகள் மேம்பாட்டிற்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- பல்வேறு கருத்தரங்குகள் முகாம்கள்
- தலைமைத்துவ முகாம்கள் அல்லது வேலைத் திட்டம்
- முதலுதவி முகாம் மற்றும் வேலை திட்டங்கள்
- வளமிக்க சமூகம்

Mahir Asanar

**கலை மற்றும் கைவினை தொடர்பான இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

- முத்திரை சங்கம்
- அல்பம் தயாரித்தல்
- சமயல்கலை நிகழ்ச்சிகள்
- புகைப்பட சங்கம்
- மலர்கள் தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிப்பு
- களிமண் மாதிரிகள் தயாரிப்பு
- சித்திரம் மற்றும் படைப்புகள் உருவாக்கம்

**பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய நிலையான ஆலோசனைகளும் முறைகளும்**

**வேலைத்திட்டங்களுக்காக அனுமதியினை அல்லது அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல்**

பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளை செயல்படுத்துகின்ற போது (விசேடமாக வெளிவாரியான நிறுவனங்களுடன் தொடர்புபட்டதாக) பிள்ளைகளினது பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இதற்காக வேண்டி உரிய அனுமதியினை உரிய விதமாக பெற்றுக் கொள்வது பாடசாலையின் அதிபரின் பொறுப்பாகும்.

**அனைத்து விதமான இணைப்பாடவிதான செயற்பாடுகளும் பாடசாலைகளில் மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்**

**அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் (பாடசாலை மட்டத்தில் நடத்தப்படுகின்ற செயற்பாடுகளுக்காக)**

- ❖ அகில இலங்கை மட்டத்தில் நடக்கின்ற அனைத்து போட்டிகள்
- ❖ மாணவர் முகாம்கள், (மாணவர் படையணி அல்லது சாரணர்)
- ❖ வெளிநாடு பயணமாகுதல்
- ❖ கால்நடைப் பயணம்
- ❖ கண்காட்சி
- ❖ மாணவத் தலைவர் நிகழ்ச்சிகள்
- ❖ வெளிக்கள விஜயங்கள்

Mahir Asanar

**செயற்பாடுகளுக்கு அமைய அனுமதியினை பெற்றுக் கொள்கின்ற போது அவசியமாகின்ற தகவல்கள்**

- ❖ பாடசாலை சங்கங்களை தாபிக்கின்ற போது பின்பற்ற வேண்டிய திட்டங்கள் **இணைப்பு** 1 மூலம் காட்டப்பட்டுள்ளது
- ❖ இணைப்பாடவிதான செயற்பாடுகள் அல்லது நிகழ்ச்சிகளை செயற்படுத்துகின்ற போது ஆரம்பகட்ட அனுமதியிணை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் **இணைப்பு** 2 மூலம் காட்டப்பட்டுள்ளது
- ❖ வெளிநாட்டு விஜயத்திற்காக மாணவர்களை அல்லது ஆசிரியர்களை அல்லது உத்தியோகத்தர்களை கலந்து கொள்ள செய்யும்போது ஆரம்ப அனுமதியினை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் **இணைப்பு -** 03 இல் கட்டப்பட்டுள்ளது.

**இணைப்பாடவிதான செயற்பாடுகளை பாடசாலையினுள் செயற்படுத்துவதற்கான பொதுவான அறிவுறுத்தல்கள்**

- ❖ பாடசாலையினுள் செயல்படுத்தப்படுகின்ற அனைத்து இணைப்பாடவிதான செயற்பாடுகளும் அதிபரினது முழுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்
- ❖ இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக பிரதி அல்லது உதவி அதிபர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்
- ❖ அனைத்து பாடசாலை இணைப்பாடத்திட்ட செயற்பாட்டிற்கு மாணவர்களை கலந்து கொள்ள செய்வது இன்னுமொரு செயற்பாடாக மட்டுமின்றி மாணவர்களின் மென் ஆற்றல்களை மேம்படுத்துவதற்காகவும் சிறந்த நற்பிரஜையொன்றை சமூகத்திற்கு வழங்குவதற்கான நோக்கமாகக் கொண்டு அதனை நிறைவேற்றுவதற்காகவும் இருத்தல் வேண்டும்
- ❖ ஒவ்வொரு மாணவ மாணவியையும் குறைந்தது இணைப்பாடத்திட்ட செயற்பாடுகள் இரண்டிலாவது கலந்து கொள்ளுதல் வேண்டும் ( சங்கங்களுக்கு மேலதிகமாக)
- ❖ ஒவ்வொரு செயற்பாட்டிற்காகவும் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு குறிப்பு ஒன்றினை பேணுதல் வேண்டும்
- ❖ பாடசாலையில் செயல்படுத்தப்படுகின்ற அனைத்து இணைப்பாடவிதான செயல்பாடுகளும் வருடாந்த கலண்டரில் அல்லது வருடாந்த திட்டமிடலில் உட்படுத்துதல் வேண்டும்
- ❖ இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக இணைக்கப்படுகின்ற ஆசிரியர்களின் ஆற்றல் மற்றும் ஆர்வத்துக்கு அமைய அவர்கள் இணைப்பாடவிதான

Mahir Asanar

செயற்பாடுகளுக்காக செயற்திறன் மிக்கவர்களாக இணைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

- ❖ பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற சங்கங்களின் ஒத்துழைப்பினையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ளும் போது அந்த உதவி ஒத்தாசைகளின் பெறுமதியும் முக்கியத்துவமும் அதன் நோக்கமும் தெளிவுபடுத்தப்படுதல் வேண்டும்

- ❖ ஆசிரியர்கள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக தொடர்பு படுகின்ற அனைவரினதும் ஒருங்கிணைந்த ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

- ❖ பாடசாலை இணைப்பாடவிதான செயல்பாடுகளில் பங்களிப்பு செய்கின்ற ஆசிரியர்கள் பாடசாலையில் உரிய விதத்தில் மதிப்பளிக்கப்படுதல் வேண்டும்

- ❖ இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக மாணவர்கள் கலந்து கொள்கின்ற போது தவறவிடப்படுகின்ற கல்வி நடவடிக்கைகளை அவர்களுக்கு வழங்குவதற்காக விசேட வேலைத்திட்டமொன்று பாடசாலைளினுள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

**வெளிவாரியான நிறுவனங்கள் மூலம் பாடசாலையில் இணைபாடவிதான செயற்பாடுகள் செயல்படுத்தப்படுகின்ற போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்**

- ❖ வெளிவாரியான நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளுள் மாணவர்களை பங்குபற்றச் செய்கின்ற போது கல்வி அமைச்சின் செயலாளர்களிடமிருந்தும் தேவைக்கேற்ப மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்தும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்
- ❖ ஒவ்வொரு வெளிவாரியான நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பு செய்வதற்காக வேறுவேறாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்
- ❖ இந்த ஒவ்வொரு இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காகவும் வருடாந்த திட்டமிடல் தயார் செய்யப்படுதல் வேண்டும்
- ❖ இந்த அனைத்து செயற்பாடுகளும் பாடசாலையின் வருடாந்த நாட்காட்டியில் உள்ளடக்கப்பட வேண்டும்
- ❖ செயற்படுத்தப்படுகின்ற வயது தொகுதிக்கு எற்ப இணைப்பாடவிதான பெயர் பட்டியல் ஒன்றை பேணிவர வேண்டும்
- ❖ கல்வி அமைச்சிலோ அல்லது உரிய மாகாணக் கல்வித் திணைக்களத்திலோ அனுமதியினை பெற்று கொள்ளாது எந்த

Mahir Asanar

நிகழ்ச்சிக்காகவும் மாணவர்கள் பங்குபற்றலாகாது. உதாரணமாக ஜம்போரி , பயிற்சி முகாம் , வெளிநாட்டு நிகழ்ச்சிகள் போன்றவை.

- ❖ இந்த இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்குரிய ஜம்போரி பயிற்சி முகாம், வெளிநாட்டு நிகழ்ச்சிகள் போன்றவற்றிற்காக மாணவர்களை கலந்து கொள்ள செய்யும்போது **பெற்றோரின் பூரண அனுமதியினை எழுத்து மூலம் பெறுதல் வேண்டும்.**
- ❖ இந்த செயற்பாடுகளுக்காக மாணவர்களிடமிருந்து தனிப்பட்ட வகையில் **பணம் சேகரிக்கக்கூடாது**
- ❖ மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப மாணவர்கள் இந்த நடவடிக்கைகளில் பங்கேற்க வாய்ப்பளித்தல் வேண்டும்
- ❖ இந்த இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு ஏற்றவறாக நடக்கின்ற ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களில் கலந்து கொள்வதற்காக ஆசிரியர்களுக்கு வசதி செய்யப்படுதல் வேண்டும்
- ❖ தேசிய கல்வி விஞ்ஞான பிரிவிலிருந்து கல்வித்துறையில் இணைந்து கொள்கின்ற ஆசிரியர் இந்த இணைப்பாடவிதான செயல்பாடுகள் தொடர்பில் பயிற்சியொன்றினைப் பெற்றிருப்பதனால் பாடசாலையில் இருக்கின்ற இத்தகைய ஆசிரியர்கள் இந்த வேலைத்திட்டத்திற்கு அவசியம். **இணைபாடவிதான செயற்பாடுகள் பாடசாலைக்குள் செயல்படுத்தப்படுகின்ற போது பேணப்படவேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு.**
  - பாடசாலை வருடாந்த கலண்டருடன் தொடர்பான இணைப்பாடவிதான கலண்டர்
  - ஒவ்வொரு இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காகவும் உள்ள திட்டமிடல்
  - இணைப்பாடவிதான செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பொறுப்பு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பெயர் பட்டியல்
  - பாடசாலையில் நடத்திச் செல்லப்படுகின்ற விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான நடவடிக்கை தொடர்பிலான பெயர் பட்டியல்
  - இணைப்பாடவிதான சுற்று நிருபக் கோவை
  - இணைப்பாடவிதான வளவாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் பெயர் பட்டியல்
  - விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான நடவடிக்கைகள் தொடர்பான வரவு செலவு ஆவணம்.
  - கலந்து கொள்கின்ற மாணவர்கள் பெயர் பட்டியல்
  - ஒவ்வொரு வாரத்திலும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் செயல்படுத்தப்படுவது தொடர்பிலான நேரசூசி

Mahir Asanar

- **இணைப்பாடவிதான செயற்பாடுகளை பாடசாலைக்குள் செயல்படுத்தப்படுகின்ற போது பேணப்பட வேண்டிய அறிக்கைகள்**
    - நாளாந்தம் தபால் மூலம் கிடைக்கின்ற இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பிலான கடிதங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட ஆவணம்
    - வருடாந்த திட்டமிடலுக்கு ஏற்றவாறான செயற்பாடு தொடர்பிலான அறிக்கை
    - இணைபாடவிதான செயற்பாடுகளுக்காக ஆசிரியர்கள் பயிற்சியாளர்கள் மற்றும் மாணவர்களின் வருகை தொடர்பிலான பெயர் பட்டியல்
    - இணைபாடவிதான மேற்பார்வை அறிக்கை
    - வெற்றிப்பதிவுகள்
    - வெற்றியீட்டல்கள் தொடர்பிலான சான்றிதழ் பகிர்ந்தளித்தல் மற்றும் மதிப்பீடு மேற்கொள்னல் தொடர்பாள அறிக்கை
    - இணைபாடவிதான தரவட்ட அறிக்கைகள்
    - கல்வி சுற்றுலா தொடர்பிலான தரவுகளும் கடிதம் ஆவணங்களும்
    - இணைபாடவிதான நடவடிக்கைகளுக்காக ஆசிரியர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டமை தொடர்பிலான அதிபரினால் பேணப்பட்டுவருகின்ற அறிக்கை
    - ஆரம்பப் பிரிவு இணைபாடவிதான செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்களின் கோவை
    - பாடசாலை நேரத்தில் இணைபாடவிதான செயற்பாடுகளுக்காக பாடசாலையிலிருந்து வெளியில் செல்கின்ற ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பெயர் பட்டியல்
    - **பயிற்சியாளர்களினது உள்வருகை, வெளிச்செல்கை கையொப்ப ஆவணம்**
    - எமது பாடசாலை எந்த அளவுக்கு தரமானது என்ற மதிப்பீட்டுச் செயற்பாட்டுகளுக்குரிய இணைப்பாடவிதான செயற்பாட்டுப்புத்தகம்
    - ஒவ்வொரு மாணவர்களுக்காகவும் தனிப்பட்ட வகையிலான இணைப்பாட செயற்பாட்டு புத்தகம் ஒன்றை பேணுதல் (மாணவர்களின் அறிக்கைப் பதிவேடும் இதற்கேற்ப பேணப்பட முடியும்)

Mahir Asanar

**பின்ணினைப்பு-01**

**பாடசாலை சங்கங்கள் உருவாக்கும் போது பின்பற்ற வேண்டிய ஏற்பாடுகள்**

பாடசாலையில் ஏதேனும் சங்கமொன்றை ஆரம்பிப்பதாக இருப்பின் கீழ்குறிப்பிட்ட விடயங்களுக்கு ஏற்ற மும்மொழிவினை அதிபரிடம் இருந்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்

1. சங்கத்தின் பெயர் : ………………………………………………
2. அறிமுகம் : ………………………………………………
3. சங்கத்தினை ஆரம்பிப்பதற்கான தேவை : ………………………………………
4. இலக்குகள் : ………………………………………………
5. நோக்கங்கள் : ………………………………………………
6. ஆலோசனைகளம் வழிகாட்டல்களும் : ………………………………………
7. அங்கத்துவம்
   - தகமைகள் : ………………………………………………
   - புதிய ஆட்சேர்ப்பு: ………………………………………………
8. கூட்டம் நடத்துதல்
   - செயற்குழு : ………………………………………………
   - வருடாந்த பொதுச் சபை கூட்டம் : ………………………………………
9. பதவி வகிப்பவர்கள் (Office bearers)
10. உத்தியோகத்தர் கடமைகளும் பொறுப்புக்களும் : ……………………………
11. மும்மொழியப்பட்ட செயற்பாடுகளும் அவைகளை செயல்படுத்தலும் : ………………………………………………
12. கருத்துத்திட்டத்திற்காக தேவையான அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் : ………………………………………………

Mahir Asanar

**பின்னிணைப்பு-02**

இணைப்பாடவிதான செயற்பாடுகளும் வழிகாட்டுதல்கள் , ஆலோசனைப் , பிரிவுகள் இணைப்பாடவிதானம் மற்றும் ஆரம்ப தொடக்க கல்வி பிரிவு கல்வி அமைச்சு

- பாடசாலையின் பெயர் :-…………………………………………………………..
- தொடர்புபடுகின்ற வெளிவாரி நிறுவனம் : ……………………………………
- வேலை திட்டம் : …………………………………………………………..
- நிகழ்ச்சி திட்டம் நடக்கும் திகதி : ……………………………………………
- அனுமதிக்காக கடிதம் கிடைத்த திகதி: ……………………………………….

**இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக அல்லது நிகழ்ச்சிகளுக்காக ஆரம்பப் அனுமதியினை பெற்றுக் கொள்வதற்காக இணைப்பாடவிதான பிரிவுக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

குறிப்பு அந்தந்த நிகழ்ச்சிக்காக இருந்த check List சரிபார்க்கும் படிவத்தினை மிகப் பொருத்தமான முறையிலும் உச்ச அளவிலும் பயன்படுத்துதல் வேண்டும்

01. திட்டம் குறித்த முழுமையான அறிக்கை(கருத்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய கூறுகள் வேறாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) ☐

1.1 நிகழ்ச்சி நடாத்தும் இடமும் திகதியும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது ☐

1.2 அதிபரினது அனுமதியையும் பரிந்துரையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ☐

1.3 கலந்துகொள்ள செய்யப்படுகின்ற அனைத்து பிள்ளைகளிளுக்காகவும் பெற்றோர்களினது அனுமதி கிடைக்கப்பட்டுள்ளது என அதிபரினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது (பிள்ளைகள் கலந்து கொள்வதாக இருப்பின்) ☐

1.4 அதிபரினால் அனுமதிக்கப்பட்ட கலந்து கொள்கின்ற பிள்ளைகளினது பெயர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது ☐

1.5 மாணவர்களினது உடற் தகுதி தன்மை அவசியமாயின் செல்லுபடியான வைத்திய அறிக்கை (மூன்று மாதத்தில் பெற்றுக் கொண்டவை) சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது ☐

Mahir Asanar

1.6 மாணவர்களும் பொறுப்பாக இருக்கின்ற ஆசிரியர் ஆசிரியைகளின் அனைத்து விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

1.7 அழைக்கப்பட்ட பாடசாலைகளின் பாடசாலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

1.8 பாடசாலை வருடாந்த நிகழ்ச்சி திட்டமிடல் உள்ளடக்கப்பட்டுள்ளது

02. வேலைத்திட்டங்களில் அனுமதிக்கப்பட்ட செலவு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

2.1 நிகழ்ச்சி திட்டத்திற்காக ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளும் முறைமை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

2.2 தேவைக்கு ஏற்ற விதத்தில் கொள்முதல் அனுமதியையும் மாகாண அல்லது வலய அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

2.3 **எந்த விதத்திலேயும் பாடசாலை மாணவர்களிடத்தில் பணம் அளவிடப்படவில்லை என ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்**

2.4 வெளிவாரியான நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஒன்றுடன் இடம்பெறுகின்ற வேலைத்திட்டத்தின் போது அதன் ஏற்பாடுகளுக்கு அமைய சான்றுப்படுத்துகின்ற கடித ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது (இந்த கடிதம் வெளிவாரியான நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)

2.5 நடாத்துவதற்கு எதிர்பார்க்கின்ற வேலை திட்டங்களினது நேரசூசியுடன் வேலைத்திட்டங்களின் சாராம்சம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது

2.6 நிகழ்ச்சிகளுக்காக கலந்துகொள்கின்ற உத்தியோகத்தர்கள் விரிவுரையாளர்கள் அல்லது வளவாளர்கள் தொடர்பிலான அனைத்து விபரங்கள் (அந்த உத்தியோகத்தர்களினது தகைமைகளுடன்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

2.7 பிள்ளைகள் உள்ளடங்கலாக கலந்து கொள்கின்ற அனைவரினதும் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. (உரிய பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதங்களுடன்)

2.8 நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்களுக்காக உணவு, தங்குமிட, வசதி, சுகாதார வசதி, ஏனைய ஆரோக்கிய பாதுகாப்பு வசதிகளை வழங்குவது



Mahir Asanar

தொடர்பாக உரிய பிரிவுகளுடன் உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

2.9 மாணவர்கள் மற்றும் கலந்துகொள்பவர்களுக்காக தரிப்பிட வசதி வாய்ப்புகள் வழங்குவது தொடர்பான அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது

2.10 மாணவர்களது போக்குவரத்து வசதிகள் வழங்குவது தொடர்பாக அனைத்து விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

2.11 முகாமிடல் செயற்பாடுகள் அல்லது கால்நடை பயணம் போன்ற நிகழ்வின் போது தாதிகள் மற்றும் முதலுதவி வசதிகளுடன் அம்பிலன்ஸ் வாகன வசதிகள் வழங்கல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

2.12 வெளிக்கள பயணத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற வாகன அனுமதிப்பத்திரம் சாரதி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது

2.13 முகாம்கள் அல்லது கால்நடை பயணம் நடக்கின்ற இடத்தின் அண்ணளவான திட்டமிடல் அல்லது பயணம் செய்யும் வழி தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

Mahir Asanar

**இணைப்பு-03**

**இணைப்பாடவிதான வழிகாட்டல்கள் வழிகாட்டல் பிரிவு, இணைப்பாடவிதானம் மற்றும் ஆரம்பக் கல்வி அபிவிருத்திப் பிரிவு, கல்வி அமைச்சு**

வெளிநாட்டு பயணத்தினை ஏற்பாடு செய்யும் நிறுவனம் : ………………………

நிகழ்ச்சி : ……………………………………………………………………...

வெளிநாட்டு பயணம் மேற்கொள்ளப்படும் நாடு : ………………………………...

வெளிநாட்டு பயணத்திற்காக அனுமதி கடிதம் கிடைத்த திகதி : ………………

**வெளிநாட்டு பயணத்துக்காக மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை பங்குபெற்ற செய்யும்போது ஆரம்ப அனுமதியை அல்லது பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக இணைபாடவிதான செயற்பாட்டு பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. சமர்ப்பிக்கப்படுகின்ற வேண்டுகோள் தொடர்பில் பரிந்துரையும் அனுமதியுடன் கூடிய விரிவான கடிதம் ☐
2. வெளிநாட்டு அழைப்பு கடிதம் ☐
3. சுற்றுலாக்காக மாணவர்களை தெரிவு செய்கின்ற முறைமை தொடர்பிலான கடிதம் ☐
4. நிகழ்ச்சிகளின் விபரங்கள் (சுற்றுலாவுக்காக சென்ற கால எல்லைகள் ) ☐
5. சுற்றுலா மூலம் மாணவர்களின் கல்விக் குழு பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கின்ற இலாபம் தொடர்பான விவரம் ☐
6. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கும் சுற்றுலாவிற்காக கலந்து கொள்வதற்கு ஆசிரியர் மூலம் அனுமதி வழங்கிய கடிதத்தின் மூலப்பிரதி அதிபரின் பரிந்துரையுடன்(கல்விச் செயலாளருக்கு) ☐
7. நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து புறப்படும் திகதி நிகழ்ச்சி முடிந்து இலங்கைக்கு திரும்பிவருகின்ற திகதிக்கும் இடையே கடமையிலான் தினங்கள் எவ்வகை என்பதும் அவ்வாறு மேலதிக நாள் பயன்படுத்துவதற்கான காரணம் ☐
8. அந்த மாணவர்கள் சுற்றுலாவில் கலந்து கொள்வதற்காக பெற்றோர் விருப்பத்தையும் அனுமதியையும் வழங்கிய கடிதங்களின் மூலப்பிரிதி அதிபரின் பரிந்துரையுடன் **(தாய் தந்தை இருவரினது ஒப்பத்துடன்)** ☐

Mahir Asanar

9. கலந்துகொள்ளும் மாணவர்களின் உடற்தகுதி குறித்து அரச வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரால் வழங்கிய வைத்திய அறிக்கையின் மூலப்பிரதி அதிபரின் பரிந்துரையுடன்(கல்விச் செயலாளருக்கு)

10. பாடசாலை மாணவர்களது பொறுப்புக்களையும் கடமைகளையும் ஏற்றுள்ள உத்தியோகத்தரின் விபரங்கள் ( அவர்களது கடமைகளை தழுவிக்கொள்வது சம்பந்தமாக நிறுவனத்தலைவர் மூலம் அனுமதிக்கப்பட்ட கடிதம்)

11. உரிய ஆசிரியரினது அல்லது உத்தியோகத்தர்களினது கடவுச்சீட்டினதும், NIC இனதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்

12. சுற்றுலாவுக்காக கலந்து கொள்பவர்களுக்கு வைத்திய வசதிகளை உள்ளடக்கும் விதமாக வழங்கப்பட்டுள்ள காப்புறுதி காப்பீடு தொடர்பான விபரங்கள் (சுற்றுலாவில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்)

13. 16 வயது பூரணமான மாணவர்கள் தமது அடையாள அட்டை பிரதியும் 16 வயது பூரணமாகாதவர்கள் பாடசாலையின் அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட 2 ✕ 2 அளவிலான நிற புகைப்படம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்

14. அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டு பிரதி

15. வெளிநாட்டு சுற்றுலாவில் பங்கு கொள்ளும் உத்தியோகத்தர்களின் செலவினைப் பெற்றுக் கொள்ளும் விதம் (சான்றுக்கடிதங்கள் அனுசரணை கிடைக்கும் விதம்)

16. விமான போக்குவரத்து நேர அட்டவணை

17. பிள்ளைகளினது பொறுப்புக்களையும் கடமைகளையும் ஏற்று கலந்து கொள்ளும் ஆசிரியர் அல்லது ஆசிரியை ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்தப்படவில்லை என வலயக் கல்விப் பணிபாளரின் சான்றுக் கடிதம்

18. ஆசிரியர் அல்லாத சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்குப் பொறுப்பாகச் செல்கின்றவர் அல்லது உத்தியோத்தரது தொழில் அடையாளத்தை உறுதிப்படுத்தும் கடிதம் (சுற்றுலாவுடன் தொடர்புபடும் விதம் )

19. கலந்து கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கு பொருந்துகின்ற விதத்தில் ஆசிரியர் கலந்து கொள்ள வேண்டும் (சுற்றுநிருபத்திற்கமைய)

Mahir Asanar